Puducherry / Regional Bulletin / Tamil / 18.10hrs. /23.09.2026/Script

வணக்கம்

ஆகாஷ்வாணி – புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : கிருஷ்ணமூர்த்தி ராமசுப்ரமணியன்

தேதி : 23.09.2026 – புதன்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

இளைஞர்களின் முயற்சிகளால், இந்தியா, 2047ஆம் ஆண்டிற்கு முன்பாகவே, முன்னேறிய நாடாக மேம்படும் என்று குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

இந்தியாவில், காகித அடிப்படையிலான வரி நடைமுறைகள், முற்றிலும் டிஜிட்டல் நடைமுறைகளாக மாற்றப்பட்டு வருவதாக, மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

தவறான வாழ்க்கை முறைகளால் ஏற்படும் நோய்களைத் தடுக்க, முழுமையான அணுகுமுறை ஒன்றை, ஆயுர் வேதம் வழங்குதாக, மத்திய ஆயுஷ் துறை அமைச்சர் திரு. பிரதாப் ராவ் ஜாதவ் கூறியுள்ளார்.

மத்திய அரசின் Start-up India இயக்கத்தினால், நாட்டில், Start-up நிறுவனங்களின் எண்ணிக்கை, 2.3 லட்சத்தை தாண்டி அதிகரித்துள்ளது.

முர்மு -வதோதரா (19)

இளைஞர்களின் முயற்சிகளால் இந்தியா, 2047ஆம் ஆண்டிற்கு முன்பாகவே, முன்னேறிய நாடாக மேம்படும் என்று குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார். இன்று குஜராத் மாநிலம், வதோதராவில், மஹாராஜா சாயாஜிராவ் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் உரையாற்றிய அவர், கல்வி, நாட்டிற்கும்,

சமூகத்திற்கும் பயன்பட்டால் தான், அர்த்தமுள்ளதாக மாறும் என்றார். தற்போது அனைத்து துறைகளிலும் தொழில்நுட்ப மாற்றங்கள் ஏற்பட்டு வருவதால், சமகால பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதில், பல்துறை அணுகுமுறை அவசியம் என்று குடியரசு தலைவர் வலியுறுத்தினார். கல்வி உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் பெண்களின் பங்களிப்பு அதிகரித்து வருவதையும் அவர் பாராட்டினார். விழாவின்போது 12 ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு பட்டங்களும், சிறப்பாக தேர்ச்சி பெற்றவர்களுக்கு பதக்கங்களும் வழங்கப்பட்டன. குஜராத்தில் 2 நாள் பயணம் மேற்கொண்டுள்ள குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று மாலை வதோதராவில், பிரம்மகுமாரிகள் அமைப்பின், உலக ஆன்மீக தியான மையத்தை திறந்து வைக்கிறார். உலகின் மறுமலர்ச்சிக்கான ஆன்மிக எழுச்சித் திட்டத்தையும், இளையோர் உள்ளாற்றல் வெளிப்பாடு மூலம், முன்னேறிய இந்தியா என்னும் இயக்கத்தையும் குடியரசு தலைவர் தொடக்கி வைக்கிறார்.

நிர்மலா (14)

இந்தியாவில் காகித அடிப்படையிலான வரி நடைமுறைகள், டிஜிட்டல் நடைமுறைகளாக மாற்றப்பட்டு வருவதாகவும், வரி செலுத்துவோர் மீதான நம்பிக்கை அடிப்படையில், புதிய நடைமுறைகள் அமைவதாகவும், மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில், பிரிக்ஸ் நாடுகளின் வரித் துறை தலைவர்களின் கூட்டத்தில் உரையாற்றிய அவர், இந்தியாவில் செயற்கை நுண்ணறிவு அடிப்படையில், வரி செலுத்துவோருக்குத் தேவையான

உதவிகள் வழங்கப்படுவது குறித்து பிரிக்ஸ் நாடுகள் ஆர்வம் காட்டி இருப்பதாக தெரிவித்தார். வரி செலுத்துவோர் எண்ணிக்கை குறைவாக இருந்தும், வலுவான வரிக் கட்டமைப்புகளை உருவாக்கிய அனுபவம், பிரிக்ஸ் நாடுகளுக்கு இருப்பதால், நாடுகளுக்கு இடையிலான வரி கட்டமைப்பு குறித்த பலதரப்பு பேச்சு வார்த்தைகளில் பிரிக்ஸ் நாடுகளின் பார்வைக் கோணத்திற்கு முக்கியத்துவம் அதிகம் என்று நிதியமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

ஆயுர் வேதம் -1 (11)

தவறான வாழ்க்கை முறைகளால் ஏற்படும் நோய்களைத் தடுக்க, முழுமையான அணுகுமுறை ஒன்றை ஆயுர் வேதம் வழங்குதாக மத்திய ஆயுஷ் துறை அமைச்சர் திரு. பிரதாப் ராவ் ஜாதவ் கூறியுள்ளார். 11ஆவது ஆயுர் வேத தினமான இன்று, நாக்பூரில் நடைபெற்ற தேசிய அளவிலான விழாவில், அவர் பேசுகையில், சமச்சீர் உணவு, போதிய உறக்கம் மற்றும் முறையான பழக்கங்கள் மூலம், உடல் நலத்தை பராமரிக்கவும், ஆயுர் வேதம் கற்றுத் தருவதாக கூறினார். நோய் சிகிச்சை-உடல் நலப் பராமரிப்பு ஆகிய இரண்டிற்கும் ஆயுர் வேதம் சம அளவில் முக்கியத்துவம் அளிப்பதால், இலையுதிர்கால இரவு-பகல் சம நாளான செப்டம்பர் 23ஆம் தேதி ஆயுர்வேத தினம் கொண்டாடப்படுவது, மிகவும் பொருத்தமானது என்றும் அவர் குறிப்பிட்டார். ஆயுர்வேத தினம் குறித்து ஒரு செய்தி தொகுப்பு...

(வாய்ஸ்)

ஆயுர் வேதம் -2 வாய்ஸ் (20)

(வாய்ஸ்)

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு, கடந்த ஆண்டு மார்ச் மாதம் வெளியிட்ட அறிவிக்கையின்படி, ஆண்டுதோறும் செப்டம்பர் 23ஆம் தேதி ஆயுர்வேத தினமாக கொண்டாடப்படுகிறது. இவ்வாண்டு, ஆரோக்யமான எதிர்காலத்திற்கான ஆயுர் வேதம் என்ற கருப்பொருள் அடிப்படையில் கொண்டாட்டங்கள் நடைபெறுகின்றன. இன்றைய விழாவின் போது, 2030ஆம் ஆண்டிற்கான ஆயுஷ் தொலைநோக்குப் பார்வை என்பது உட்பட 6 முக்கிய அறிக்கைகள் வெளியிடப்பட்டன. விழாவின் ஒரு பகுதியாக ஆயுர் வேதம் குறித்த அறிவியல் அமர்வுகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கடந்த 12 ஆண்டுகளில் நாட்டின் ஆயுஷ் துறையில் முக்கிய முன்னேற்றங்கள் எட்டப்பட்டுள்ளன. உலக சுகாதார அமைப்பின் சார்பில், குஜராத் மாநிலம், ஜாம் நகரில், உலக பாரம்பரிய மருத்துவ மையம் நிறுவப்பட்டுள்ளது. அங்குள்ள ஆயுர்வேத கல்வி மற்றும் ஆராய்ச்சிக் கழகம், தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனமாக அறிவிக்கப் பட்டுள்ளது. நோய்கள் குறித்த உலக சுகாதார அமைப்பின் 11ஆவது சர்வதேச வகைப்பாட்டு கட்டமைப்பில், சித்தா, ஆயுர்வேதா மற்றும் யுனானி மருத்துவமனைகள் சேர்க்கப்பட்டுள்ளன. இந்தியாவில், ஆயுஷ் துறையின் மதிப்பு தற்போது, 6.5 லட்சம் கோடி ரூபாயாக கணக்கிடப்பட்டுள்ளதும், 2030ஆம் ஆண்டிற்குள் இத்துறை 20 பில்லியன் டாலர் துறையாக மேம்படும் என எதிர்பார்க்கப் படுவதும் குறிப்பிடத்தக்கது.

ஆசிய விளையாட்டு (09)

ஜப்பானில் நடைபெறும் ஆசிய விளையாட்டுப் போட்டிகளின், 49 கிலோ மகளிர் பளு தூக்கும் பிரிவில், இந்திய வீராங்கனை மீராபாய் சானு வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளார். ஆடவர் soft tennis பிரிவில் இந்திய வீரர் ஜெய் மீனா வெண்கலப் பதக்கம் வென்றார். மகளிர் அணிகளுக்கு இடையிலான Skeet Shooting பிரிவில், மகேஸ்வரி சிங், பரிணாஸ் தலிவால், ரைசா தில்லான் ஆகியோர் அடங்கிய இந்திய அணி வெண்கலப்பதக்கம் வென்றுள்ளது. ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்றவர்களுக்கு, குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பிரதமர் திரு. நரேந்திர மோடி உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

சேவா சங்கல்ப் -1 (14)

மக்கள் சேவை மூலமான தேச சேவை என்ற தாரக மந்திரத்தின் அடிப்படையில், பொது சேவையில் 25 ஆண்டுகளை பூர்த்தி செய்யும் பிரதமர் திரு நரேந்திர மோடியின் சேவைப் பயணம், இன்று வரை அயராத உறுதிப்பாட்டுடன் தொடர்கிறது. சேவை மற்றும் நல்லாட்சி என்னும் பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வைக்கு ஏற்ப, 2047-ஆம் ஆண்டிற்குள் முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்தும் இலக்கை நோக்கி, நாடு தொடர்ச்சியாக பயணித்து வருகிறது. அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி-அனைவருக்கும் சமூக அதிகாரம் என்னும் அரசின் கொள்கையினால், நாட்டு மக்களின் வாழ்க்கையில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. சேவா சங்கல்ப் அபியான் என்னும், இந்த சிறப்பு தொடரில், பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலை நோக்கு பார்வை அடிப்படையிலான, Start-up India இயக்கத்தினால், நாட்டில்

தொழில் முனைவு திறன்கள் ஊக்கம் பெற்று வருவது குறித்து, தற்போது காண்போம்.

(வாய்ஸ்)

சேவா சங்கல்ப் -2 வாய்ஸ் (19)

வேலை தேடுவோரின் நாடாக இருந்த இந்தியாவை, மற்றவர்களுக்கு வேலை வழங்கும் தொழில் முனைவோர் மற்றும் புதுமைப் படைப்பாளர்களின் நாடாக மேம்படுத்தும் நோக்கிலான, Start-up India திட்டம், 2016ஆம் ஆண்டு தொடக்கப்பட்டது. அப்போது நாட்டில், மொத்தம் 400 Start-up நிறுவனங்கள் மட்டுமே இருந்த நிலையில், தற்போது இந்த எண்ணிக்கை, 2.3 லட்சத்தை தாண்டி அதிகரித்துள்ளது. இவ்வாண்டு மார்ச் மாதம் வரையிலான காலத்தில், இந்நிறுவனங்களால் மொத்தம் 23 லட்சம் வேலை வாய்ப்புகள் உருவாகியுள்ளன. இதன் மூலம், உலகின் 3ஆவது மிகப் பெரிய Start-up நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது. இம்மாபெரும் மாற்றத்தின் தாக்கங்களை, பெங்களூர், மும்பை, டெல்லி நகரங்களுக்கு வெளியிலும் காணமுடிகிறது. நாட்டின் 50 சதவிகித Start-up நிறுவனங்கள், 2ஆம் நிலை மற்றும் 3ஆம் நிலை நகரங்களில் செயல்பட்டு வருவதே இதற்குச் சான்றாகும். Start-up India இயக்கத்திற்கு அடித்தளமாக பள்ளிகளில் ஏற்கனவே 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட, அடல் டிங்கரிங் ஆய்வகங்கள் அமைக்கப்பட்டு, 1 கோடியே 10 லட்சத்திற்கும் அதிகமான மாணவர்கள், உள்ளூர் பிரச்சனைகளுக்கு தொழில்நுட்பத் தீர்வுகளை வடிவமைக்கும் ஆய்வுகளில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர். நாட்டின் 50 சதவிகித Start-up நிறுவனங்களில், குறைந்தபட்சம் ஒரு பெண் இயக்குநர் அல்லது கூட்டாண்மையாளர்

சேவா சங்கல்ப் -3 வாய்ஸ்  (05)

இருப்பதும் குறிப்பிடத்தக்கது. தொழில் முனைவு என்பது, பெரிய நகரங்களைச் சேர்ந்த, குறிப்பிட்ட சிலருக்கு மட்டுமே உரியது என்ற எண்ணத்தை மாற்றி, அனைத்து பிரிவினரின் லட்சியத்துடன் கூடிய தேசிய இயக்கமாக மேம்படுத்துவதில், Start up India இயக்கம் முக்கியப் பங்காற்றி இருப்பதில் ஐயமில்லை.

தட்டாஞ்சாவடி (07)

புதுச்சேரியில், தட்டாஞ்சாவடி சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலின் போது பயன்படுத்துவதற்கான மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை, வாக்குச்சாவடி வாரியாக ஒதுக்கீடு செய்வதற்கான இரண்டாம் கட்ட தற்செயல் கலப்பு நடைமுறைகள் நிறைவு பெற்றதைத் தொடர்ந்து, இது குறித்த விவரப் பட்டியல், வேட்பாளர்கள் மற்றும் அவர்களின் பிரதிநிதிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. தேர்தல் நடத்தும் அதிகாரி திரு. அர்ஜுன் ராமகிருஷ்ணன், செய்திக்குறிப்பு ஒன்றில் இதை தெரிவித்துள்ளார்.

பிஜேபி (05)

பிஜேபி தலைவர் திரு. நிதின் நபின் 36 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு, கட்சி பொறுப்பாளர்களை நியமித்துள்ளார். தமிழ்நாடு மற்றும் உத்தராகண்ட் மாநிலங்களுக்கான கட்சிப் பொறுப்பாளராக திரு.ராம் மாதவ், புதுச்சேரி யூனியன் பிரதேசத்திற்கான பிஜேபி பொறுப்பாளராக திரு. கே. சுரேந்திரன் ஆகியோர் நியமிக்கப் பட்டுள்ளனர்.

காரைக்கால் நமசிவாயம் (08)

காரைக்காலில், கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் கோட்டுச்சேரியில் நடைபெற்ற விழாவில், புதுச்சேரி மாநில உள்துறை அமைச்சர் திரு. நமசிவாயம் கலந்து கொண்டு, மொத்தம் 1 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை, கால்நடை வளர்ப்போருக்கு வழங்கினார். 280 பேருக்கு கால்நடை ரப்பர் தரை விரிப்புகளும், 83 பேருக்கு ஹைட்ரோபோனிக் தீவன அமைப்புகளும், 30 பேருக்கு, பசுந்தீவனத்தை நறுக்கும் இயந்திரங்களும், 50 பேருக்கு கறவை இயந்திரங்களும் மற்றும் இதர உபகரணங்களும் வழங்கப்பட்டன.

வானிலை (18)

வங்கக் கடலில் நிலவும் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம், மேற்கு-வடமேற்கு திசையில் தொடர்ந்து நகர்ந்து இன்று இரவு அல்லது நாளை அதிகாலை வாக்கில், கலிங்கப்பட்டினம் அருகே, வடக்கு ஆந்திரா மற்றும் தெற்கு ஒடிசா கடலோரப் பகுதிகளைக் கடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. தமிழகத்தில் இன்று, மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் பலத்த காற்றுடன் கூடிய கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாக வானிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சென்னை, காஞ்சீபுரம், செங்கற்பட்டு உள்ளிட்ட மாவட்டங்களின் ஓரிரு இடங்களில், பலத்த காற்றுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும், தமிழகத்தின் இதர பகுதிகள் மற்றும் புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில், லேசான மழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும்

தெரிவிக்கப்பட்டுள்ளது. வரும் 29ஆம் தேதி வரை, மழை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. சூறாவளிக் காற்றுக்கு வாய்ப்பு அதிகமுள்ள, தமிழக கடலோரப் பகுதிகள், வங்கக்கடல் பகுதிகள், மற்றும், அரபிக்கடல் பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இதற்கிடையே, கடந்த24 மணி நேரத்தில் அதிகபட்சமாக கடலூர் மாவட்டம், குணமங்கலத்தில், 3 சென்டிமீட்டர் மழை பதிவாகியுள்ளது.

வங்கிகள் (08)

வரும் 27ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை நாடுமுழுவதும், பொதுத்துறை வங்கிகள் மற்றும் பிராந்திய ஊரக வங்கிகள் செயல்படும் என மத்திய நிதியமைச்சகம் அறிவித்துள்ளது. வரும் 28 முதல் 30ஆம் தேதி வரை, வங்கி ஊழியர் ஐக்கியப் பேரவை சார்பில், தேசிய அளவிலான வேலை நிறுத்தம் உத்தேசிக்கப் பட்டுள்ளதைக் கருத்தில் கொண்டு, அமைச்சகம் இவ்வாறு நடவடிக்கை எடுத்துள்ளது. வேலை நிறுத்த உத்தேசத்தைக் கைவிடுமாறு, அரசும், வங்கி நிர்வாகங்களும், ஊழியர் சங்கங்களைக் கேட்டுக் கொண்டுள்ளன.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

இளைஞர்களின் முயற்சிகளால், இந்தியா, 2047ஆம் ஆண்டிற்கு முன்பாகவே, முன்னேறிய நாடாக மேம்படும் என்று குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

இந்தியாவில், காகித அடிப்படையிலான வரி நடைமுறைகள், முற்றிலும் டிஜிட்டல் நடைமுறைகளாக மாற்றப்பட்டு வருவதாக, மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

தவறான வாழ்க்கை முறைகளால் ஏற்படும் நோய்களைத் தடுக்க, முழுமையான அணுகுமுறை ஒன்றை, ஆயுர் வேதம் வழங்குதாக, மத்திய ஆயுஷ் துறை அமைச்சர் திரு. பிரதாப் ராவ் ஜாதவ் கூறியுள்ளார்.

மத்திய அரசின் Start-up India இயக்கத்தினால், நாட்டில், Start-up நிறுவனங்களின் எண்ணிக்கை, 2.3 லட்சத்தை தாண்டி அதிகரித்துள்ளது.

இத்துடன் இந்தச் செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது. RSS/KR/VM
Puducherry / Regional Bulletin / Tamil / 18.10hrs/ 23.09.2026 / Script